# முழாம்பழ சாகுபடியில் வெற்றிக் கண்ட விவசாயி

**முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர். ம.சங்கீதா மற்றும் முனைவர். க.இந்துமதி**

முழாம்பழம் தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூர் மற்றும் காரிமங்கலம் போன்ற வட்டங்களில் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றது. தருமபுரி மாவட்டத்தில் சுமார் 175 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. குறுகிய காலத்தில் பலன் தரக்கூடிய பயிர் என்பதால் இது தோட்டக்கலை பயிர்களில் ஒரு முக்கியமான பயிராக உள்ளது. இந்த முழாம்பழ சாகுபடியில் வெற்றிக் கண்ட விவசாயி திரு.பாஸ்கர் அவர்களின் அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார். இவர் 4 ஏக்கர் நிலம் வைத்துள்ளார். இதில் நெல், பருத்தி, மஞ்சள், தக்காளி, முழாம்பழம் மற்றும் தர்பூசணி போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகின்றார். இவர் தனது ஒரு ஏக்கர் நிலத்தில் முழாம்பழம் சாகுபடி செய்து வெற்றிக்கண்டுள்ளார். இதில் அவர் பின்வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தினார்.

**இரகம்** : என்.எஸ் 910

**பருவம் :** வருடம் முழுவதும் முழாம்பழம் அடுத்து தர்பூசணி என்று மாற்றி பயிர் செய்கின்றார். வருடத்தில் இரண்டு முறை முழாம்பழம் சாகுபடி செய்கின்றார். நவம்பர் - டிசம்பர் மற்றும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பயிரிடுகிறார்.

**நிலத்தை தயார் செய்தல்**

துல்லிய பண்ணைய முறையில் நிலத்தை நன்றாக உழுது மேட்டுப்பாத்தி அமைக்கப்பட்டது 2.5மீX 0.9 மீ என்ற இடைவெளியில் பின்பற்றப்பட்டது. மேட்டுப்பாத்தி அமைத்து பின்பு நெகிழி நிலப்போர்வை வெள்ளி நிற நிலப்போர்வை அமைக்கப்பட்டது. பிறகு மண் அணைக்கப்பட்டது.

**விதைப்பு மற்றும் விதையளவு :** ஏக்கருக்கு 200 கிராம் விதை தேவை. இதை சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம் /கிலோ விதைக்கு என்றளவில் விதை நேர்த்தி செய்யப்பட்டது.

**உர மேலாண்மை**

**தொழு உரம்**

அடியுரமாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் மற்றும் DAP 100 கிலோ நிலத்தில் இடப்பட்டது. நீர்வழி உரமாக 19:19:19, 13:0:45 மற்றும் யூரியா போன்றவை முறையே 7 கிலோ, 15 கிலோ மற்றும் 25 கிலோ விதைத்த 20-ம் நாளிலிருந்து 50 வது நாள் வரை நான்கு நாட்கள் இடைவெளியில் நீர் வழி உரமாக அளிக்கப்பட்டது.

**நீர் மேலாண்மை**

தினமும் ஒரு முறை நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். விதைப்புக்கு முன்பு மேட்டுப்பாத்தி முழுவதும் நன்கு நனையும் படி நீர்ப்பாய்ச்சி விதைப்பு செய்யப்பட்டது. நெகிழி நிலப்போர்வை அமைத்ததால் களை மேலாண்மை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**நோய் மேலாண்மை**

இலைக்கருகல் நோய் தாக்குதல்,இலைகளில் வட்ட வடிவில் செம்பழுப்பு நிறமுடைய புள்ளிகள் தோன்றி இலைகள் காய்ந்து விடுகின்றது. இதனை கட்டுப்படுத்த புரோப்பிகொனசோல் 1.5 மி.லி/ லி தெளித்தேன்.

**அறுவடை**

நடவு செய்த 65 ஆவது நாள் பழங்கள் அறுவடைக்கு தயாராகி விடும். தட்டி பார்க்கும் போது மந்தமான ஒலி எழுப்பும். பழங்களில் கொடிக்காம்பு காய்ந்து விடும்.

**விளைச்சல் :** ஏக்கருக்கு 20 டன் பெறப்பட்டது.

**வரவு செலவு**

| **விபரம்** | **ஏக்கருக்கு (ரூ)** |
|---|---|
| உழவு மற்றும் மேட்டுப்பாத்தி அமைக்க | 5,000 |
| விதை (ரூ 1200 / 50 கிராம் பாக்கெட் 200 கிராம் விதைக்கு) | 4800 |
| விதைப்பு | 2000 |
| உர மேலாண்மை | 9,200 |
| பயிர் பாதுகாப்பு | 2,000 |
| அறுவடை<br><br>(மூன்று முறை அறுவடை ஒரு முறைக்கு 6 ஆள் வீதம் 6x 3 = 18 ஆட்கள்) | 3600 |
| ரூ.200x18 ஆள் நெகிழி நிலப்போர்வை அமைக்க மொத்தச் செலவு | 13500 |
| **மொத்த செலவு** | **40,100** |
| **வருமானம்** | |
| **மகசூல்: 20 டன்** | |
| மொத்த வருமானம்<br><br>ரூபாய் 8000 X 20 டன் | 1,60,000 |
| நிகர இலாபம் | 1,19,000 |

எனவே ஒரு ஏக்கர் நிலத்தில் முழாம்பழம் சாகுபடி செய்யும் போது ஒரு முறைக்கு ஒரு இலட்சம் வரை வருமானம் பெறலாம். எனவே மற்ற விவசாயிகளும் இத்தகைய பயிர்களை சாகுபடி செய்து பயனடைய வேண்டும் என்பதே இவருடைய கருத்தாக உள்ளது.

**முகவரி**

திரு.பாஸ்கர்

த/பெ சிதம்பரம்
ஜடையன்பட்டி கிராமம்
மொரப்பூர் வட்டாரம்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி : 8925462660

